<u>சுருக்கம்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிருஷ்ணகிரி மாவட்டம் – சூளகிரி ஊராட்சி ஒன்றியம் – பேரிகை ஊராட்சி – தீர்த்தம் சாலை மற்றும் சூளகிரி சாலைகள் பிரியும் இடத்தில் மகாத்மா காந்தி வெண்கலச் சிலையை நிறுவுதல் – அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.20 நாள்:10.03.2010

படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண். 15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12.06.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் (சி2) துறை, நாள் 23.11.1998.
3. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண். 62/09/அ8, நாள் 09.01.09.

* * * * *

<u>ஆணை</u>:

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், பேரிகை ஊராட்சியில் தீர்த்தம் சாலை மற்றும் சூளகிரி சாலைகள் பிரியும் இடத்தில் மகாத்மா காந்தி வெண்கலச் சிலையை அமைக்க பேரிகை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. பேபி ரோஜா ரமணி அவர்கள் அனுமதி கோரியிருந்தார்.

2. மேற்படி இடத்தில் மகாத்மா காந்தி வெண்கல சிலையை அமைப்பது தொடர்பாக, சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரிகை ஊராட்சியைச் சேர்ந்த பேரிகை கிராமத்தில் தீர்த்தம் பேரிகை சாலை மற்றும் சூளகிரி பேரிகை சாலை பிரியும் முச்சந்தியில் மேற்படி சிலை அமைக்க சூளகிரி ஒன்றியத்திற்கு எவ்வித இடையூறும் இல்லை என்றும், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு ஒருங்கிணைந்த மக்கள் நலச் சங்கம், பேரிகை தலைவர் அவர்களால் நிறுவப்படவுள்ள மகாத்மா காந்தி சிலையை பராமரிக்கப்படவுள்ளதாலும், உதவிக் கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலை அளித்த சாலைப் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லை என்ற சான்றின் பேரில்

மேற்படி சிலை அமைக்க சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலரும், கிருஷ்ணகிரி மாவட்ட முக்கிய சாலையான தீர்த்தம் பேரிகை சாலை மற்றும் சூளகிரி பேரிகை சாலை பிரியும் முச்சந்தியில் கி.மீ.18/2ல்



வலதுபுறம் மகாத்மா காந்தி வெண்கலச் சிலை அமைப்பதால் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏதும் ஏற்படாது என்று தெரிவித்து மேற்படி சிலை அமைக்க அனுமதிக்கலாம் என கிருஷ்ணகிரி நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், பேரிகை காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பேரிகையில் வனத்துறை சோதனை சாவடி அருகில் தீர்த்தம்–சூளகிரி செல்லும் மூன்று பிரிவு சாலையில் மகாத்மா காந்தி சிலை அமைப்பதால் பொதுமக்களுக்கோ, போக்குவரத்திற்கோ இடையூறு இல்லாமல் சிலையை அமைக்க அனுமதி வழங்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

4. பேரிகை கிராம புல எண்.76 விஸ்தீரணம் 0.87.5 ஹெறக்டேர் அரசு புறம்போக்கு “ரோடு” என்று வகைபாடு உள்ள இடத்தில் பேரிகை – தீர்த்தம் ரோடு மற்றும் பேரிகை சூளகிரி ரோடு பிரியும் இடத்தில் தீர்த்தம் சாலைக்கு தெற்குப் புறமும், சூளகிரி சாலைக்கு கிழக்குப் புறமும் உள்ள 10 மீ சுற்றளவு கொண்ட இடத்தில் மேற்குபுறம் 1.20 மீட்டர் உயரம், 1.20 மீட்டர் நீளம், 1.20 மீட்டர் அகலம் உள்ள வட்டவடிவ மேடையில் 1.7 மீட்டர் உயரம் உள்ள மகாத்மாகாந்தி சிலை உள்ளது என்றும், இந்த வட்ட வடிவ மேடையில் உயர்கோபுரமின் விளக்கு கம்பம் ஒன்றும் உள்ளது என்று ஒசூர் வட்டாட்சியரின் சான்றின் பேரில், ஒசூர் வருவாய் கோட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

5. ஒசூர் வட்டாட்சியர் மற்றும் ஒசூர், வருவாய் கோட்ட அலுவலர் ஆகியோரின் அறிக்கையில், மேற்படி இடத்தில் தற்சமயம் சிமெண்ட்டினால் ஆன மகாத்மா காந்தி சிலை அமைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பெறப்பட்ட பேரிகை ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கத்தில், சிலை அமைக்கப்படவுள்ள பிரஸ்தாப இடத்தில் சில விஷமிகள் இட ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டதாகவும், அதனை தடுக்கும் நோக்கத்தோடும், பொதுமக்களின் ஆர்வத்தின் காரணமாகவும் தற்காலிகமாக சிமெண்டினால் ஆன சிலை வைக்கப்பட்டதாகவும், அரசின் அனுமதி பெற்றதும் வெண்கலத்தால் ஆன சிலை அமைக்கப்படும் என உறுதி கூறியுள்ளதாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

6. மேற்படி இடத்தில் மகாத்மா காந்தி வெண்கல சிலையை அமைப்பதற்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்று பேரிகை ஊராட்சி தனது 02.10.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆகவே, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், பேரிகை ஊராட்சியில் தீர்த்தம் சாலை மற்றும் சூளகிரி சாலைகள் பிரியும் இடத்தில் மகாத்மா காந்தி வெண்கலச் சிலையை அமைக்க

அரசின் அனுமதி வழங்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆகியோர் பரிந்துரை செய்துள்ளனர்.

7. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவை, மேலே 1 மற்றும் 2–ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதம் மற்றும் அரசு ஆணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆகியோரின் பரிந்துரையினை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், பேரிகை கிராமத்தில் புல எண்.76–ல் விஸ்தீரணம் 0.87.5 ஹெக்டேர் அரசு புறம்போக்கு ரோடு என்று வகைபாடு செய்யப்பட்டுள்ள தீர்த்தம் சாலை மற்றும் பேரிகை சூளகிரி சாலை பிரியும் சாலைக்கு தெற்குபுறம் ஜவுளகிரி

..3..

சாலைக்கு கிழக்குபுறம் உள்ள இடத்தில் வெண்கலத்தாலான மகாத்மா காந்தி சிலையை அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

1. மகாத்மா காந்தி சிலையை வெண்கலத்தில் மட்டுமே செய்து உயர்ந்த பீடம் அமைத்து வைக்க வேண்டும்.

2. சிலையை சுற்றி நான்கு பக்கமும் இரும்பு கம்பிவேலி அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

3. கம்பி தடுப்பு நல்லமுறையில் அழகுற அமைக்கப்பட வேண்டும். சிலை உள்ளே அடைப்பட்டது போல அமைக்கப்பட கூடாது.

4. சிலை அமைக்க குழு ஒன்று அமைக்க வேண்டும். சிலையை இக்குழுவினரே பராமரிப்பு செய்ய வேண்டும். பராமரிப்பு செலவினை அவர்களே ஏற்று சரி செய்து கொள்ள வேண்டும்.

5. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வண்ணம் சாலை மற்றும் பொது வழிகளிலிருந்து தகுந்த இடைவெளியுடன் சிலை அமைய வேண்டும்.

6. பொதுமக்களின் அன்றாட பணிகளுக்கு இடையூறு நேராத வண்ணம் சிலை அமைக்க வேண்டும்.

7. இச்சிலை அமைக்கப்படவுள்ள பகுதியில் நெடுஞ்சாலை பகுதியினை எதிர்காலத்தில் வேறு ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யக்கூடாது.

8. இச்சிலை மேற்கூறிய நிபந்தனைகளுக்குட்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், பேரிகை ஊராட்சியில் குறிப்பிடப்பட்ட எல்லைக்குள் அமைய வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

..4..

மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
<u>நகல்</u>
பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்